www.tamilarangam.net

விலை ரூபா 10.00

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

ஆனி 2000 | இதழ் -15

"எங்களைச் சாகடிக்கிற ஆமிக்கு மனிதாபிமானமாம்! அது போதாது எண்டு எங்களுக்கு இவையளே தீர்வும் வைக்க வெளிக்கிடினம். எங்கோயே கிடக்கிற இவையள் எல்லாம் இப்ப மட்டும் ஏன் எங்கடை விசயத்திலே தலை போடினம்?"

# தமிழீழ மாணவர் சக்தியின் எழுச்சி!

தமிழீழப் பிரதேசம் எங்கும் மாணவர்களின் எழுச்சிப் போராட்டங்கள் பரவலாக நடைபெற்று வருகிறது. அண்மையில் மட்டக்களப்பு நகரில் மாணவர்கள் சிங்களப்படையினரால் படுகொலைக்கு உள்ளானதை எதிர்த்து நமது மாணவர்கள் இப்போராட்டத்தில் இறங்கினர். விடுதலை செய்யப்பட்ட பிரதேசங்கள் அடங்கலாக எதிரியின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கும் பகுதிகள் எங்கும் மாணவர் போராட்டங்கள் பரவலாக நடைபெற்றன.

மட்டக்களப்பில் தமிழ் மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு எதிராக வன்னி உட்பட தமிழீழத்தின் பல்வேறு பிரதேசங்களிலுமுள்ள மாணவர்களும் ஓரணி திரண்டுள்ளனர். இனவெறி அரசின் அடக்குமுறைகள் உச்சத்தை அடைந்திருக்கும் நிலையில், தமது அடிப்படை உயிர்வாழும் உரிமையை பாதுகாத்துக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது, நமது மாணவர் சமூகம். இனவெறி அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்திருப்பது நமது மாணவர் சமூகத்தின் முன்மாதிரியான போர்க்குணாம்சத்தின் வெளிப்பாடாகும். மொத்தத் தேசமும் எதிரிக்கெதிராகக் கிளர்ந தெழுவதற்கான தூண்டலாகவும் மாணவர்களின் இவ்வெழுச்சிப் போராட்டங்கள் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இனவெறி அரசு தமிழ் மாணவர்கள் மீதும் தமிழ் தேசத்தின் மீதும் கட்டவிழ்த்து வரும் படுகொலைகளை தமது ஆவேசமான எழுச்சியின் மூலமாக நமது மாணவர்கள் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். இதன் மூலம் சிறிலங்கா அரசு பாடசாலை மாணவர்களை படுகொலை செய்கிறது எனும் குற்றச் சாட்டல்களையும் பல்வேறு கேள்விகளையும் சர்வதேச மட்டத்தில் சிறிலங்கா அரசு எதிர்கொள்ள வேண்டிய நிலையை உருவாக்கிட முடிந்தது எனும் வகையில் நமது மாணவர் எழுச்சி வெற்றிகரமானதாகும்.

மாணவர் சமூகத்தின் உரிமைகளுக்காகவும், தமிழ் தேசத்தின் உரிமைகளுக் காகவும் நமது மாணவர்கள் மேற்கொள்ளும் அனைத்து விதமான போராட்ட நடவடிக்கைகளுக்கும் நம்மனைவரதும் ஒத்துழைப்பையும் வரவேற்பையும் வழங்குவோம். ஓங்குக சுதந்திர மாணவர் போராட்டங்கள்!

## குண்டு மழைக்கு மத்தியில் வடதமிழீழம்!

ஈழத்தமிழரான நம்மை அழித்தொழிப்பதையே தனது இனத்துவக் கொள்கையாகக் கொண்டுள்ள சிங்கள சோவினிச அரசு வட தமிழீழத்தில் மக்களின் மீது கண்மூடித்தனமாக குண்டு மழை பொழிந்து வருகிறது. இந்த இனவெறி அரசு தனது கொலை வெறிக்கு முதியோர் இல்லத்தைக் கூட விட்டு வைக்கவில்லை. சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்களின் தாக்குதலினால் மக்கள் தொடர்ந்தும் படுகொலைக்குள்ளாகி வருவதுடன் அங்கவீனர்களாவதும் அதிகரித்து வருகிறது.

வட தமிழீழத்தில் அவமானகரமான தோல்விக்கு உள்ளாகியிருக்கும் நிலையில் பொதுமக்கள் மீது குண்டு மழை பொழிவதனூடாகவே மக்களை மீளவும் தனக்கு அடிபணிய வைத்திடலாமென சோவினிச அரசு கருதுகிறது. வட தமிழீழம் ஆக்கிரமிப்பின் பிடியிலிருந்து விடுதலை பெறுகிறது என்பதை அவதானித்துவரும் சிங்கள படைத் தளபதிகள் சிலர், செச்னியாவில் ரஷ்யாவால் மேற்கொள்ளப்பட்ட "பரவலான குண்டு வீச்சு" (carpet bombing) போல் யாழில் மேற்கொள்ள வேண்டுமெனவும் முன்மொழிந்துள்ளனர். மனிதத்துவத்திற்கு விலைபேசும் "கொலைஞன்" அனுருத்த ரத்வத்த யாழில் இருவாரங்கள் தங்கியிருந்து மீண்டும் ஒரு 95 ஒக்டோபருக்கான திட்டங்கள் வகுத்திருப்பதாக அறிவித்துள்ளதுடன் இதை தொடர்புபடுத்தி பார்க்க வேண்டும்.

தாம் எதிர்கொண்டிருக்கும் படுதோல்வியை ஒப்புக்கொள்ள முடியாது, தமது படைகளின் உயிரைப்பற்றி கிஞ்சித்தும் அக்கறையற்று, தொடர்ந்தும் யுத்தத்தை தீவிரமாக முனைவதற்கு முயலும் இந்த இனவெறி அரசு எமது உயிருக்கு மதிப்பளிக்க வேண்டுமென நாம் எதிர்பார்க்க முடியாது. இனவெறி அரசை தமிழீழ மண்ணில் முழுமையாக தோற்கடிக்கும் அன்றுதான் நமது உயிருக்கான உத்தரவாதத்தை நாமே ஏற்படுத்திட முடியும்.

## தமிழ் ஊடகவியலாளர் மீது கொலைப்பயமுறுத்தல்

அண்மைக்காலமாக தமிழ் ஊடகவியலாளர் மீது தொடர்ச்சியாக கொலைப்பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. தினமுரசு அற்புதம் கொலைசெய்யப்பட்டது தொடக்கம் இவ்வகை பயமுறுத்தல் தீவிரமடைந்துள்ளது. அரசும் அதன் முகவர்களும் கூலிப்படை பிரிவுகளும் இதன் பின்னணியில் உள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் மட்டக்களப்பில் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அடக்குமுறைகளின் பல்வேறு வடிவங்களையும் எதிர்த்து அம்பலப்படுத்தும் இந்த நிகழ்வுகள் சிறிலங்க அரசு மற்றும் சிங்கள இனவாதிகள் மத்தியில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. சிங்கள தினசரிப் பத்திரிகையொன்று இப்படியான நிகழ்வுகளை புலிப் பயங்கரவாதக் கண்கொண்டு நோக்கியுள்ளது. இதில் குறிப்பிட்டுக் கூறவேண்டிய விடயம் என்னவென்றால் இச்செய்தி இரண்டு முறை ஒரே பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்ததாகும். அடக்குமுறை தணிக்கைப்பிரிவு வேண்டுமென்று இதனை கத்திரிக்காது விட்டுவைத்தது

விரிவடைந்தும் கூர்மையடைந்தும் செல்லும் அடக்குமுறை வடிவங்கள் தற்போது, தமிழ் ஊடகவியலாளர்களை நோக்கியும் நோக்கி நீட்சி பெற்றுள்ளது. சட்டங்களின் துணையுடன் மட்டுமன்றி இந்த அரசபயங்கரவாத வழிமுறைகளும் நேரடியாக பயன்படுத்தப்படுகின்றது. தமது உரிமைகள் மறுக்கப்படுமிடத்து, பறிக்கப்படுமிடத்து, அதனை எதிர்த்து சம்பந்தப்பட்ட பிரிவினர் தமக்குள் ஒன்றிணைவதும் அமைப்பாவதும், குரல் எழுப்புவதும் போராட்டங்களை நடாத்துவதும் தவிர்க்க முடியாதது. இந்த அடிப்படையில் தமிழ் ஊடகவியலாளர்கள் நியாயத்தின் அடிப்படையில் ஒன்றிணைந்துள்ளமை வரவேற்கப்படவேண்டிய விடயம்.

(தொடர்ச்சி 7ஆம்பக்கம்)

எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆதிக்க அரசுகள்!

நமது தேசிய விடுதலைப் போராட்டமானது தனது இறுதி வெற்றியைப் பெறுவதும், நம் தேசத்தின்மீதான அடக்குமுறைகளுக்கு முடிவு கட்டப்படுவது என்பதும் சிறிலங்கா அரசு மற்றும் பல்வேறு ஆதிக்க சக்திகளை வென்ற பின்னரே முழுமையாக சாத்தியமாகும். எம்மீது ஏவப்பட்டுள்ள அடக்குமுறைகள் மற்றும் ஆக்கிரமிப்பு யுத்தத்தின் நீடிப்பிற்கும் நம்மீதான கொடுரத்திற்கும் சிறிலங்கா அரசின் எஜமானர்களான ஆதிக்க அரசுகள் பின்னணியாக இருந்து வருகின்றன. இனவாத அரசிற்கு பக்கபலமாக நின்று உதவுவதன் மூலம் தொடர்ச்சியாக இதனைச் செய்து வருகின்றன. நிதியுதவிகள், கடனுதவிகள், பாரியமுதலீட்டு உட்பாய்ச்சல்கள், ஆயுதவழங்கல், நவீன படைப்பயிற்சிகள் போன்றவற்றுடன், உலக அரங்கில் எமது போராட்டத்தை இருட்டடிப்புச் செய்வது மற்றும் இழிவுபடுத்தல் போன்ற எண்ணற்ற வழிமுறைகள் மூலமாக இந்த ஆதிக்க அரசுகள் சிறிலங்கா இனவெறி அரசிற்கு பக்கபலமாக இருந்து வருகின்றன.

தமிழீழ விடுதலைப் போராட்டம் வேறெந்த அரசினதும் உதவியுமின்றி தற்போது சுயாதீனமாகவும் வெற்றிகரமாகவும் வெற்றிக்கொடியை நாட்ட விருப்பதும், ஒரு புதிய தேசஅரசை நிர்மாணிப்பதை நோக்கி முன்னேறுவதும் இந்த ஆதிக்க அரசுகளை நிலைகுலையச் செய்துள்ளது. புதிய நிலைமைகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் விதத்தில் விரைந்து செயற்படுமாறு தத்தமது கொள்கை வகுப்பாளர்களை ஆதிக்க அரசுகள் முடுக்கி விட்டுள்ளன. தமது இராஜதந்திரிகளை கொழும்பு நோக்கி ஒருவர் பின் ஒருவராக அனுப்பி வருகின்றன. தமக்கு போதிய அவகாசத்தை பெற்றுக் கொள்வதற்காக அவசர அவசரமாக எமது போராட்டம் மீதும் விடுதலைப்புலிகள்மீதும் பயங்கரவாத முத்திரைகளை புதுப்பிக்கின்றன. ஏற்கனவே உள்ள தடைகளை நீடிக்கின்றன. புதிய புதிய அச்சுறுத்தல்களை விடுத்துக்கொண்டிருக்கின்றன. வட தமிழீழத்தில் அகப்பட்டுள்ள சிங்கள இராணுவத்திற்கான மனிதாபிமானத் தலையீட்டைச் செய்வதற்கு தயார் நிலையில் உள்ளன.

அனைத்துக்கும் மேலாக, இந்த ஆதிக்க சக்திகள் ஈழத்தமிழரின் தேசிய அபிலாசைகளை நிர்ணயம் செய்யவும் வரையறுக்கவும் முனைகின்றன. சுயாதீனமும் சுயநிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசமாகிய நாம், எமது தேசியஅபிலாசைகளையும், அரசியல் பரிமாணத்தையும் வரையறுத்து வட்டுக்கோட்டை மாநாட்டில் தீர்மானித்து 1977 பொதுத்தேர்தலில் சர்வசன வாக்கெடுப்பாக தெள்ளத்தெளிவாக எடுத்துக்காட்டி விட்டோம் என்பதை இவர்கள் வசதியாக மறந்து விடுவதோடு, இருட்டடிப்பும் செய்துவிடுகின்றார்கள். நமது தேசத்தின் தேசிய அபிலாசைகளை வரையறுப்பதில் இனி எந்த ஆதிக்க சக்திகளுக்கும் வேலையில்லை. என்பதை "சூடு கண்டும்" புரிய மறுக்கின்றார்கள்.

1977 இல் ஜனநாயகபூர்வமாக திட்டவட்டமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள நமது தேசிய அபிலாசைகளை சர்வதேச சமூகம் மதிக்க வேண்டும். இந்த ஆதிக்க அரசுகளும் மதித்தாக வேண்டும். நமது தேசியஅபிலாசைகளை கௌரவிக்காத எவரது தேசியஅபிலாசைகளையும் கௌரவிக்கும் எந்தவித நிர்ப்பந்தமும் எமக்கு இல்லை. அரசியல் உரிமைக்காக 50 வருட தொடர்ச்சியான எமது போராட்டம் ஒன்று போதாதா? எமது தேசியஅபிலாசைகளை வெளிப்படுத்த, இதற்கு மேல் என்ன நிரூபணம் தேவை இவர்களுக்கு?

நமது தேசிய விடுதலையானது இந்த ஆதிக்க சக்திகளின் தேசிய நலன்களுக்கும் அரசுகளுக்கும் ஆபத்து என்கிறார்கள். அப்படி என்ன கேட்டை எமது விடுதலை இவர்களுக்கு விளைவிக்கப் போகின்றது? அப்படியிருப்பின் அவற்றை வெளிப்படையாக முன்வைக்கட்டும். எம்மீது மீண்டும் அடக்குமுறைகளையும் கொள்ளைக்கார பொருளாதாரத்திட்டங்களையும் திணிக்காத எமது தேசிய அபிலாசைகளுக்கு குந்தகமில்லாத எந்தவொரு ஏற்பாடுகளையும் பரஸ்பரம் பேசித் தீர்ப்பதில் எமக்கு எந்தப் பிரச்சனையுமில்லை. அவர்களின் நியாயமான தேசியநலன்களுக்கு எந்த கெடுதியும் எமது தரப்பில் வராது என சர்வதேச சமூகத்திற்கு உத்தரவாதம் கொடுப்போம். மாறாக, ஆதிக்க சக்திகள் தமக்கிடையிலான ஆதிக்க போட்டிகளுக்காகவும் பிராந்திய ஆதிக்கத்தனங்களுக்காகவும் எமது தேசத்தின் இறைமையை விலையாக கேட்பதை நாம்ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

ஐரோப்பிய யூனியனினதும் அமெரிக்காவினதும் ஏன் தேசங்களின் ஒன்றியத்தினதும் (United Nations) அழுத்தங்களையும் ஆட்சேபனைகளையும் பொருளாதார தடைகளையும் புறந்தள்ளி இந்திய மற்றும் பாகிஸ்தான் அரசுகள் அணுஆயுத சோதனைகளை நடாத்தியது எனின், சீன அரசு அடங்காதுநிற்கின்றது எனின், ஒருவரும் கேள்வி கேட்க முடியாதளவில் ஏகாதிபத்திய அரசுகள் அணுஆயுதங்களை குவித்து வைத்திருக்கின்றன எனின், அடக்கப்படும் ஒரு சின்னஞ்சிறிய தேசம்: இனஅழிப்பில் இருந்து தன்னை பாதுகாக்க அரை நூற்றாண்டுகளாக போராடிவரும் ஒரு தேசம் தனது தேசிய அபிலாசைகளுக்காகவும் இறைமைக்காவும் எந்தவொரு சக்தியையும் ஏன் யாசிக்க வேண்டும்?

அடக்கப்பட்டு வந்த பல தேசங்கள் தமது நீண்டகால விட்டுக்கொடாத போராட்டம் காரணமாக புதிய அரசுகளை அமைக்கும் நிகழ்வுகள் அண்மைக்காலமாக, அதிகளவில் நடந்தேறுவதை வரலாறு தரிசித்துக் கொண்டிருக்கின்றது. இருப்பினும் நமது தேசவிடுதலை மட்டும், நமது தேசஅரசு அமைவதில் மட்டும் இந்த ஆதிக்க அரசுகளுக்கு ஆட்சேபணை! ஏன்? இதற்கான முக்கிய காரணம், தமது அடிமை விசுவாசியான சிறிலங்கா அரசை எதிர்த்து எந்தவொரு அரசினதும் உதவியின்றி தன்னந்தனியாக நமது தேசம் போராடி வெற்றி பெறும் தறுவாயில் உள்ளது என்பதுதான். அளப்பெரிய இந்த வெற்றிகளை ஆதிக்க சக்திகளால் சகித்துக் கொள்ள முடியவில்லை என்பதே உண்மை. இந்த முன்னுதாரணம் இவர்களை அச்சுறுத்துகின்றது.

தமிழீழம் அமைவது தென்னாசிய பிராந்தியத்திற்கு ஆபத்தானது என எங்கோ கிடக்கும் அமெரிக்காவும், ரஸ்யாவும் பிற அரசுகளும் தீர்மானங்களை நிறைவேற்றுகின்றன. திறந்த மனத்துடன் அவை வரட்டும். தென்னாசியாவிற்கு எம்மால் என்ன ஆபத்து எனக் கூறட்டும். தமிழீழ அரசினால் தென்னாசியாவிற்கு எந்தவித ஆபத்துகளும் நேராது எனவும், சகதேசங்களுடன் சமாதான சகவாழ்வு நாடாத்துவோம் எனவும் எழுதி தேசங்களின் ஒன்றியத்தின் முன்னே ஒரு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவோம்.

இதற்கு மாறாக, விடயங்கள் இரகசியதிட்டங்கள் கொண்டு ஆதிக்க அரசுகளால் நகர்த்தப்படும் எனின், தமிழீழ குடியரசு அமைவதால் அல்ல, பதிலாக அவ்வாறு அமையவிடாமல் இந்த ஆதிக்க அரசுகள் பலவந்தமாக தலையிட்டு தடுக்க முயல்வதுதான் தென்னாசிய பிராந்தியத்துக்கு உண்மையான ஆபத்தாக அமையும் என்பதை எமது போராட்டம் அவர்களுக்கு உணர்த்தும். எமது போராட்ட வரலாற்றைப் பார்க்கும் எவருக்கும் இது தெளிவாகவே புரியும்.

நமது போராட்டத்தில் நேரடித்த-

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## நம் தேசத்தின் முதற்போர்க்குரல்: சிவகுமாரன்!

### இளங்கோவின் ஒரு கவிதை:



தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் எதிரிக்கெதிரான போரில் வீரமரணமடைந்த

**முதல் போராளி சிவகுமாரன்**

பிறப்பு:26-08-1952 வீரமரணம்:05-06-1974

உம் மக்களின்,
இளைஞர்களின்
இறந்த உடல்களின் மீதும்,
சாம்பல் மேடுகளின் மீதும்,
ஏறி நின்று
உயர்த்திய கரங்களில்
துப்பாக்கிகளை
ஏந்தியபடி,
ஓங்கிய குரல்கள்
விண்ணதிர ஒலிக்க
உனது முகத்திலறைந்து
கூறுகின்றோம்:

"இங்கு எமக்கொரு
வாழ்வுண்டு"
எங்கள் இருப்பை
அங்கீகரிக்க மறுக்கும்
எல்லோருக்கும்
நாங்கள் எதிரிகளே!,,

உனது
இரத்தமொழுகும் கரங்கள்
வாழ்வுக்காக மரணிப்பதைத்
தவிர
வேறெதனையும்
எமக்கு உணர்த்தவில்லை.

நன்றி:
தான்பிரீன்: தொடரும் பயணம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஆனையிறவு வெற்றி:

## தேசப் போராட்டத்தின் பெருந்திருப்பம்



நமது தாயகத்தின் முப்பெரும் நிலப்பரப்பான மத்திய தமிழீழம் (மன்னார், முல்லைத்தீவு, வவுனியா), வட தமிழீழம் (யாழ் பிராந்தியம்), தென்தமிழீழம்( திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை) ஆகிய மூன்று பகுதிகளையும் ஒன்றுக்கொன்று தொடர்பற்று துண்டாடுவதனூடாக நமது நிலத் தொடர்ச்சியை சிதைப்பதில் சிங்கள் அரசு திட்டமிட்டு செயற்பட்டு வந்துள்ளது.

ஈழத்தமிழர் தம்மை மொழி ரீதியான ஒரு தேசமாக இனங்கண்டு எழுச்சியுற்றதுடனேயே சிங்கள அரசு எச்சரிக்கையடைந்து விட்டது. 1956இல் தனிச்சிங்களச் சட்டத்திற்கெதிராக தமிழர்கள் அனைவரும் கிளர்ந்தெழுந்தனர். ஈழத்திலும் மலையகத்திலும், ஏன் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் கூட மக்கள் போராட்டங்கள் தீவிரம் பெற்றன. தமிழரசுக் கட்சியின் தலைமையில் தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இருந்தும் திருமலை நோக்கி நடைபெற்ற பாதயாத்திரைப் போராட்டம், சிங்கள சிறி எழுத்து எதிர்ப்புப் போராட்டம், மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் போன்றன ஈழத் தமிழர் தேசியப் போராட்டத்தில் தனியரசு நோக்கிய முதல் அடியெடுப்பிற்குக் கட்டியங் கூறின. நமது நிலத் தொடர்ச்சியானது எழுச்சிப் போராட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு சாதகமானதாக இருந்ததைக் கண்ட சிங்கள அரசு தனது நலன் சார்ந்த தூரநோக்குடன் செயற்படத் தொடங்கியது.

ஆனையிறவு பிரதேசமானது வடதமிழீழத்துடன் மத்திய தமிழீழத்தையும் தென்தமிழீழத்தின் கடல் மற்றும் நிலத் தொடர்ச்சியையும் இணைத்து நிற்கும் பிரதேசமாகும். 17ம் நூற்றாண்டில் நமது மண்ணை ஆக்கிரமித்த போர்த்துக்கீச காலணிய ஆக்கிரமிப்பாளர்கள் ஆனையிறவு பிரதேசத்தின் முக்கியத்துவத்தை இனங்கண்டு இதில் தமது பாதுகாப்பு தளத்தை நிறுவினர். அவ்வகையில் மூன்று நூற்றாண்டிற்குரிய வரலாறொன்றைக் கொண்டவிடமாக ஆனையிறவு பிரதேசம் உள்ளது. காலணிய விடுதலைக்குப் பின்னர் அது விட்டுச் சென்றதன் தொடாச்சியாக இவ்விடத்தில் கடத்தல் கண்காணிப்புக்கான சிறு காவலரண் ஒன்று இருந்தது. 1958இல் நடைபெற்ற இனக் கலவரமானது தமிழ்த் தேசத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தியதுடன், அன்றைய பண்டாரநாயக்கா அரசு முற்றிலும் தனது பேரினவாத தீர்க்க தரிசனத்துடன் ஆனையிறவு காவலரணில் யாழ்பாண இராணுவ கொமாண்டரின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட இராணுவத் தடுப்பொன்றை ஏற்படுத்தியது. இதனூடாக ஈழத்தமிழரின் தேசிய ஒருங்கிணைவையும் புவியியல் தொடர்ச்சியையும் துண்டாடும் காரியத்தை சிங்கள அரசு ஆரம்பித்து வைத்தது. அரசியல் வழிப்பட்ட இந்த இராணுவத் தலையீடானது தமிழீழத்தில் சிங்கள அரசினால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ ஆக்கிரமிப்பிற்கான முதலாவது முன்னெடுப்பாகும் என்பது குறிப்பானது.

1978இல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஏற்படுத்தி 300க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களை படுகொலை செய்த ஜே. ஆர். அரசு 1980இல் ஆனையிறவு இராணுவ முகாமை தனது ஆக்கிரமிப்பு யுத்தத்திற்காக விரிவாக்கியது. ஈற்றில் சந்திரிகா அரசு 20,000 படைகளைக் குவித்து அப்பகுதியை இராணுவப் பிரதேசமாக விஸ்தரித்தது. அதனூடாக தேசத்தின் ஒருங்கிணைவையும் நிலம், கடல் அடங்கிய புவியியல் தொடர்ச்சியையும் துண்டாடியது.

சிறிலங்கா படைத்தரப்பைப் பொறுத்தவரையில், வடதமிழீழம், மத்திய தமிழீழம், தென்தமிழீழம் ஆகிய மூன்று திசைகளையும் நோக்கியதாக படைகளை நகர்த்தக்கூடிய புவியியல் முக்கியத்துவமுடைய இராணுவ மையமாக ஆனையிறவு திகழ்ந் தது. அதேபோல் மத்திய தமிழீழத்திலிருந்து பின்வாங்கும் இராணுவத்துக்கான பின்தளமாகவும் ஆனையிறவு இருந்தது. இத்தகைய புவியியல் முக்கியத்து வத்தின் காரணமாகவே தனது “மிகச் சிறந்த” 53வது டிவிசனின் தலைமையில் 20,000 வரையிலான படைகளைக் கொண்டு பாரிய இராணுவப் பிரதேசமாக அப்பிரதே சத்தை உருவாக்கியிருந்தது சிறிலங்கா அரசு. சிறிலங்கா படையின் உயர் மட்ட அதிகாரிகளிடையே ஆனையிறவு(EPS) விழுந்தால் யாழ்ப்பாணம் விழும் எனும் பார்வை முன்பிருந்தே இருந்து வந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய ஒரு படைத்தளத்தை இழந்திடுமளவுக்கு பலவீனமான போர்த்திறனும் உளநிலையையும் உடையனவாக சிங்களப் படைகள் இருந்துள்ளன. யாழில் சிங்களப் படைகளுக்கேற்பட்டுள்ள பெரு வீழ்ச்சி அவற்றின் பின்னடைவு நிலையை மேலும் உறுதிப்படுத்துவதாயுள்ளது. போரிடும் உள்ளாற்றலை இழந்துவிட்ட இப்படைகளால் வேண்டுமாயின் தொடர்ந்தும் ஆக்கிரமிப்புப் படைகள் எனும் வடிவத்தில் தமிழீழத்தில் நிலை கொண்டிருக்க முடியுமே தவிர, இதற்குமேலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை எதிர்த்து முறியடித்திட அவற்றால் முடியாது. இவையாவும் இணைந்துதான் இந்த ஆக்கிரமிப்புப் போரில் சிறிலங்கா அரசு தோற்கடிக்கப்பட்டிருப்பதையும் தமிழீழத்தின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டிருப்பதையும் வெளிப்படுத்துகின்றன. அவ்வகையில் ஆனையிறவு வெற்றியானது நமது தேசத்தின் போராட்ட வரலாற்றில் பெருந்திருப் பமாகும். சர்வதேச அளவிலான இராணுவ, அரசியல் ஆய்வலர்கள் பலரும் இக்கருத்தை வெளிப்படுத்தி வருகின்ற அதேநேரம், சிறிலங்கா அரசுக்கு ஆதரவான ஆதிக்க சக்திகள் அனைத்தும் இதேகாரணத்தை முன்வைத்து சிறிலங்கா அரசுக்கு சார்பாக அறிக்கைகள் வெளியிட்டிருப்பதும் கவனத்திற்குரியது.

இந்நிலையில், மேற்கொண்டு நமது போராட்டம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு முன்னோக்கிய அடியும் தேசம் தன்னை ஆக்கிரமிப்பின் பிடியிலிருந்து முழுமையாக விடுவித்துக் கொள்ளும் தேச அரசு நோக்கிய முன்னேற்றங்களாக அமையும். இந்த அர்த்தத்தில் தான் தமிழீழம் 14வது இதழில் தேசம் மீட்கப்படுகிறது எனத் தலைப்பிட்டு புலிகளின் யாழ் நோக்கிய நகர்வு பற்றி குறிப்பிட்டிருந்தோம். இதற்கு மேல் இப்போராட்டத்தில் சிங்கள இராணுவத்துடனான மோதல்களில் ஏற்படும் வெற்றிகள் தோல்விகள் யாவும் விடுதலைப் போராட்டத்தின் இறுதிக்கட்ட நடவடிக்கைகளேயாகும். அவ்வகையில், ஆனையிறவு வெற்றியுடன் நமது தேசம் அரசியல் -இராணுவ அர்த்தத்தில் தமிழீழத்திற்குள் காலடி வைத்துவிட்டது என்பதே உண்மை.

நமது இதுவரைகால விடுதலைப் போராட்ட வரலாற்றில் வெற்றிகளும் தோல்விகளும் கைமாறிவந்துள்ளன. 5வருடகாலமாக யாழ்நகரை தமது தொடர்ச்சியான கட்டுப்பாட்டில் விடுதலைப் புலிகள் வைத்திருந்தனர் என்பதும் பின்னர் அது சிங்களப் படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க ஒன்றாயிருக்கையில் தற்பொழுதைய நிகழ்வுகளுக்கு மாத்திரம் ஏன் இந்த முக்கியத்து வம் கிடைத்திருக்கிறது எனும் கேள்விகளும் எழுகின்றன.

நமது கடந்தகால போராட்டத்தின் தன்மையானது இராணுவ சமநிலை மாற்றங்களின் போக்காகவே பெரிதும் வெளிப்பட்டு வந்ததுள்ளது. 95இல் சந்திரிகா அரசு வடதமிழீழத்தில் மேற்கொண்ட சூரியக்கதிர் நடவடிக்கையும், அதைத் தொடர்ந்து மத்திய தமிழீழத்தில் மேற்கொண்ட ஜயசிக்குறு, சத்ஜய நடவடிக்கைகள், தென் தமிழீழத்தின் படைநகர்வுகள், மடு ஆக்கிரமிப்பு யாவும் நமது தேசத்தை உலுப்பியெடுத்தன. நமது தேசத் தின் இதயத்தில் பாய்ந்த ஈட்டியாக சந்திரிகா அரசின் ஆக்கிரமிப்பு அமைந்தது. நமது மக்கள் மீது ஈவிரக்கமின்றி படுகொலைகளையும் சித்திரவதைகளையும் சிங்களப்படைகள் மேற்கொண்டன. தேசமே அகதிவாழ்வுக்குத் தள்ளப்பட்டது. பலர் காணாமற் போயினர், இறுக்கமான பொருளாதாரத்தடை காரணமாக பட்டினி தலைவிரித்தாடுகிறது, நோய்க்கு மருந்தில்லை, பசியும் நோயும் மக்களின் உயிரைக் காவு கொண்டன. அத்துடன் அரசுக்கு சார்பான தேசத் துரோகக் கும்பல்கள் தம்பங்கிற்கு மக்களை மேலும் துன்புறுத்தத் தொடங்கின. பெண்களுக்கு பாதுகாப்பற்ற நிலை உருவானது . . . இப்படியாக இதுவரையிலான நமது தேசத்தின் வரலாற்றில் சந்திரிகா வின் காலகட்டம்தான் மிகக் கொடுரமானதாகவும் பேரழிவுகளை ஏற்படுத்தியதாகவும் உள்ளது.

பேரினவாதத்தின் அவமானகரமான அடக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க அரசுக்கெதிரான வெறுப்பு மக்களது அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் வெளிப்படத் தொடங்கியது. தமிழ் மக்கள் தம்மை உணர்வுகளால் போராட்டத்துடன் இறுகப் பிணைத்துக் கொள்ளத் தொடங்கினர். அதன் மறுபுறம் மக்களின் தேசிய உணர்வை வெளிப்படுத்தும் போராட்ட சக்தியாக, விடுதலைப்

(தொடர்ச்சி 7ஆம்பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அரசியல் ஆயுதமாக்கப்படும் சித்திரை புத்தாண்டு!

யாழ்குடாநாடு முழுமையாக இராணுவ கட்டுப்பாட்டுக்குள் வந்தபின்பு, தமிழர்களின்சித்திரை புத்தாண்டானது திட்டமிட்ட முறையில் இராணுவ ஆட்சியாளர்களினால் அரசியல் ஆயுதமாக்கப்பட்டு வருகின்றது.

சமாதானத்திற்கான போர் என்ற பிரகடனத்துடன் - தமிழர்களை பயங்கரவாத பிடியில்இருந்து மீட்கவே புலிகளுடன் யுத்தம் புரிகின்றோம் . தமிழ் மக்கள் புலிகளை விரும்பவில்லை என்றெல்லாம் உலக அரங்கில்கூறிக்கொண்டு - முழுத்தமிழ் தேசத்தின் அடையாளங்களுக்கும், நலன்களுக்கும் எதிரான யுத்தத்தையும் பெரும் கலாச்சார சீரழிவுகளையும் அரசு மேற்கொண்டு வருகின்றது.

யாழ்குடாவை கைப்பற்றிக் கொண்ட சிங்கள படையினர், முதன் முதலில், 1997ம் ஆண்டு தமிழ், சிங்கள புத்தாண்டை வெகு விமரிசையாக யாழில் கொண்டாடினர். அதைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் இவ்வாறு இராணுவத்தினால்சித்திரை புத்தாண்டு கொண்டாடப்பட்டு வருகிறது.ஒவ்வொருஇராணுவபிரிகேட் தளபதிகளும் தமது பதவிகளின் நிலையிலிருந்து, தமக்குள் போட்டி போட்டுக் கொண்டு பல்வேறு கலை நிகழ்ச்சிகளையும் தமிழ்மக்களை இணைத்து திட்டமிட்ட வகையில் நடாத்தி வருகின்றனர். இவ்வாறு நடாத்தப்படும் கலை நிகழ்ச்சிகள் யாவும் வீடியோ பண்ணப்பட்டு, சிறிலங்கா அரசுக்கு கடன்வழங்கும் நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

இதன் மூலம், "தமிழ் மக்கள் இராணுவத்தை விரும்புகின்றனர், அவர்களின் கட்டுப்பாட்டில் எவ்வித பிரச்சனையுமின்றி மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் வாழ்கின்றனர், புலிகளை தமிழ் மக்கள் விரும்பவில்லை, புலிகள் அழித்தொழிக்கப்பட வேண்டும் என்பதை தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்கின்றனர் எனும் பொய்யான பிரச்சாரத்தை அரசு திட்டமிட்டு தொடர்ச்சியாக சர்வதேச அரங்கில் மேற்கொண்டு வருகின்றது.

தமிழர்களாகிய நாம் சித்திரை புத்தாண்டை நிச்சயம்கொண்டாடத்தான் வேண்டும். அதன் மூலம் எமது கலை, கலாச்சார பண்புகளும்எமது ஆளுமையும் தனித்துவமும் வெளிப்படுத்தப்பட வேண்டும். மாறாக, இவ்வாறாக இராணுவம்மேற்கொள்ளும்நிகழ்ச்சிகளில், கொண்டாட்டங்களில் பங்கேற்பதும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதும் எமது அரசியல் அபிலாசைகளையும் கலாச்சார பண்புகளையும் திட்டமிட்டு சிதைத்து வரும், எம்மினத்தையும்எமது தேச அரசியலையும் தீயிட்டுக்கொண்டிருக்கும்எதிரிப்படையின் சூழ்ச்சிகளுக்கு எம்மை அறியாமல் நாம் பலியாவதாகவே இருக்கும்.

கடந்த மூன்று வருட புத்தாண்டு கொண்டாட்டங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வருட நிலைமைகள் மாறுபட்ட தன்மையை கொண்டிருக்கின்றன. ஓயாத அலை-3 இன் மூலமாக, தமிழ் மக்களின் பாரம்பரிய நிலத்தை மீட்பதற்காக மிகவும் உக்கிரமான போர் நடவடிக்கைகள் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உடமைஇழந்து, உணவும்மருந்துகளும் இன்றி உறைவிடம்இன்றி உயிர்களுக்கு உத்தரவாதமும் இன்றி யுத்த பிரதேசத்திற்குள் மக்கள் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கின்றார்கள். இக்கட்டான நிலைக்குள் சிக்கியிருக்கும் மக்களை சிங்கள படையினர் கேடயமாக பயன்படுத்தி வருகின்றனர். பளையில் இராணுவத்தால் கேடயமாக்கப்பட்ட மக்களை அங்கிருந்து மீட்க கோரி, யாழ்கச்சேரிக்கு முன்னே யாழ்பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டின் பேரில் மறியல் பேராட்டத்தை பல்வேறு அமைப்புகளும் இணைந்து நடாத்தி வந்தனர்.

இவற்றையெல்லாம் மூடிமறைத்து நிலைமைகள் தமது கட்டுப்பாட்டில் சுமுகமாக இருப்பதைக்காட்ட , மக்கள் போராட்டம் எதுவும் நடைபெறவில்லை என உலகுக்குக்காட்டிட படை அதிகாரிகள் மிகவும் திட்டமிட்ட முறையில் பொதுஅமைப்புகளை இணைத்து அவற்றுக்கூடாக ஒவ்வொரு பிரதேசத்திலும் பரிய அளவில் சித்திரைப்புத்தாண்டுக் கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்தனர். இதற்காக தமிழரிடமிருந்தே நிதியும் திரட்டினார்கள்.

இப்படியாக, யாழ்ப்பாணத்தின் ஒருபகுதியில் மக்களை விடுவிக்க போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்க, தம் உடன் பிறப்புக்களுக்காக உணவு, உடை, மருந்துவகைகளை வீடுவீடாக சென்று ஒருபகுதியினர் சேகரித்துக்கொண்டிருக்க, இன்னொரு பகுதியினர் எதிரிவிரிக்கும் சூழ்ச்சி வலைகளுக்குள்சிக்கி தமது பலலட்சம் ரூபாய்களை வீண்விரயம் செய்வதுடன், நமது போராட்டத்தை பலவீனப்படுத்த முயலும் எதிரியின் திட்டங்களுக்கு பலியாகிவரும் துர்ப்பாக்கியம் நம்மத்தியில் நிலவுகிறது.

நமது பாரம்பரியத்தை, தனித்துவத்தை, ஆளுமையை வெளிப்படுத்திடும் நமது கொண்டாட்ட தினங்களை கூட எதிரி தனது அரசியல் ஆயுதமாக்கிக் கொள்ளும் நிலைக்கு முடிவுகட்டுவோம். ஆக்கிரமிப்புப் படைகளை நம்மண்ணிலிருந்து துரத்தியடித்து நம் தேசத்தின் மாண்பைக் காக்க தேசமாக அணிதிரள்வோம்!! பிறக்கட்டும் இனிவரும் சித்திரை சுதந்திர தமிழீழத்தில்!!!

-திவாகரன்-

## சிங்கள சிவில் சமூகம்: பாசிசத்தை நோக்கி. . .!!!

சிறிலங்கா அரசால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் பயங்கரவாத நடவடிக்கைகள் சிங்கள சிவில் சமூகத்திலும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்ற நிலையில், கையாலாகாத்தனமாகப் போன சிவில் அமைப்புகள் குறித்து சிறிலங்காவின் முன்னேறிய பிரிவினர் மத்தியிலொரு விவாதம் நடக்கின்றது.

அரச அடக்குமுறையானது தமிழ் மக்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும் சிங்கள மக்களும் அதற்கு அகப்படத்தான் செய்கிறார்கள். தமிழ் மக்களால் இன்று ஜனநாயக ரீதியில் அணிதிரள்வது, நிறுவனமயப்படுவது, அரச அடக்குமுறைகளுக்கு எதிராக செயற்படுவது என்பது முடியாத காரியமாக இருக்கின்ற போதும் ஏன் சிங்கள மக்களால் கூட ஏலவே, இதற்காகவே நிறுவப்பட்டுள்ள அமைப்புகள் மூலமாக ஒன்றுமே செய்ய முடியாதிருக்கிறது எனும் கேள்விகள் இந்த விவாதங்களின் சாரம்.

தற்போது புதிது புதிதாக நிறுவனமயப்பட்டு வரும் பாசிசத் தன்மை மிக்க சிங்கள இனவெறி அமைப்புகள் சிங்கள அரசின் நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிப்பதில் பிரதான சக்திகளாக செயற்படுகின்றன. இந்த இனவெறி சக்திகளும், சிங்கள ஆளுங்குழுமமும் இணைந்து சிங்கள சிவில் சமூகத்தை பாசிச நிலை நோக்கி திட்டமிட்டு நகர்த்துகின்றன. சிங்கள மக்களை யுத்தத்துக்கு மேலும் மேலும் தயார்படுத்தவும், யுத்த நெருக்கடிகளிலிருந்து அரசைப் பாதுகாக்கவும் இந்த பாசிசமயப்படுத்தல் என்பது முக்கிய தேவையாக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆதரவு வழங்காத அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள், தொடர்பூடகங்கள், மற்றும் தனிநபர்கள் என சகலருமே சிங்கள தேசத்தின் துரோகிகளாக முத்திரை குத்தப்படுகின்றனர்.

சிங்கள ஊடகங்கள் கூட தணிக்கையை ஆதரித்துப் பேசுமளவுக்கு உள்ளதெனின், இந்த பாசிசப் போக்கு எவ்வளவு ஆழமாக சிங்கள சமூகத்தில் வேரோடியிருக்க வேண்டும்?

அரசியல், பொருளாதாரம், இராணுவம் என அனைத்துத் தளங்களிலும் இதுவரையில்லாத நெருக்கடிகளை அரசு சந்தித்து வருகின்ற போதும், அனைத்தையும் சமாளித்துக் கொண்டு தொடர்ந்தும் தனது அடக்குமுறை ஆட்சியைக் கொண்டு நடாத்த சிங்கள அரசுக்கு இன்று பின்புலமாயிருந்து வருவது சிங்கள சமூகத்தில் வேரோடிப் போயிருக்கும் பேரினவாத - பாசிச சித்தாந்தமாகும். இதுவரை ஆட்சிக்கு வந்துள்ள சிங்கள அரசுகள் அனைத்தும் தாம் எதிர்கொள்ள நேர்ந்த நெருக்கடிகளிலிருந்து தப்பித்துக்கொள்ள இனவெறியைப் பிரயோகித்து வந்திருப்பதும் நாம் மறக்கக் கூடியதல்ல.

சிங்கள பாசிச சக்திகளின் கை இன்று சாதாரண சிவில் அமைப்புகளில் தொடங்கி, அரசியல் கட்சிகளினூடாக ஊடுருவி, சிங்கள அரச கட்டமைப்புவரை பாய்ந்து சென்று அதனை கட்டுப்படுத்தும் நிலை ஏற்பட்டிருப்பதானது சிங்கள சிவில் சமூகத்தை தற்கொலை நிலைக்கு கொண்டு செல்வதாகவேயுள்ளது. இவ்வாறு சிங்கள சமூகம் பாசிசமயப்படுவதானது சிங்கள – தமிழ், முஸ்லீம், மலையக மக்களின் உறவினை மேலும் துருவமயப்படுத்துவதாகவே அமைகிறது.

இந்த நிலைமையை மாற்றியமைக்க சிங்கள தேசத்தின் முற்போக்கு ஜனநாயக சக்திகள் குறைந்த பட்சம் சிவில் ஜனநாயக உரிமைகளுக்காகவாவது அணிதிரள்வது உடனடிப் பணியாகியுள்ளது. இதனை அலட்சியப்படுத்தும் அல்லது காலம் தாழ்த்தும் ஒவ்வொரு கணமும் சகலரும் பாசிசத்துக்கு இலகுவாகப் பலியாக்கப்படும் நிலைமை அண்மித்து விடும் என்பதையே வரலாறு கற்பிக்கின்றது.

- சுப்புக்குட்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழீழ விடுதலை போராட்டத்தில் விடுதலை புலிகள் - 04

# பகிரங்க தன்மையும் விடுதலை புலிகளும்

சர்வதேச அரசியல் தளத்தில், பகிரங்கத்தன்மை என்ற புதிய மரபு, உறுதியாக நிலைபெற்று வருகின்ற ஒரு கட்டத்தில் நாம் இருக்கின்றோம். ஏனைய சமூகங்கள் மீது, தமது அரசுகளினாலும் படைகளினாலும் மேற்காள்ளப்பட்ட கூட்டுவன்முறைகளையும் கூட்டுப்படுகொலைகளையும் அவற்றில் சம்மந்தப்பட்டவர்கள் நேரடியாகவோ அல்லது அந்த சமூகத்தின் சார்பிலோ பகிரங்கமாக ஒப்புக்கொள்வதானது பகிரங்கத்தன்மையின் சாராம்சமாக இருக்கின்றது. இவ்வாறு ஒப்புக் கொள்வதோடு, இத்தகைய செயலுக்காக மன்னிப்பு கோருவதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகள் வழங்க முன்வருவதும் சர்வதேச அரங்கில் மேலும் மேலும் வியாபித்து வருகின்றது. ஒரு சமூகத்தின் ஜனநாயக விழுமியங்களின் இன்னுமொரு உயர்வகை வெளிப்பாடாக இத்தகைய பகிரங்கதன்மை அமைந்திருக்கின்றது.



பகிரங்கத் தன்மையானது வெகுஜன வடிவத்தை பெற்றிருப்பதன் சான்றாக, தென்னாபிரிக்காவில் அமைக்கப்பட்ட உண்மை மன்றம் (truth commission ) விளங்குகின்றது. தென்னாபிரிக்க விடுதலையின் கொந்தளிப்பான நாட்களில், நிறவாத அரசின் வன்முறைகளும், அமைப்புகளதும் மற்றும் அங்கு வாழ்கின்ற வேறுபட்ட மக்கள் சமூகங்களிடையே இடம்பெற்ற தீவிர இனவன்முறைகளும் மனிதப்படுகொலைகளும் அந்த மக்கள் சமூகங்களின் மாபெரும் விடுதலை போராட்டத்திற்கும் அந்த நாட்டின் ஐக்கியத்திற்கும் பாரிய அச்சுறுத்தலாக அமைந்தன. இத்தகைய வன்முறை சூழலிலிருந்து விடுபடுவதற்கான ஒரு செயல்விளைவுமிக்க வழிமுறையாக, வெகுஜன பங்குபற்றுதலுடன் கூடிய உண்மை மன்றம் என்ற பகிரங்கப்படுத்தலுக்கான அமைப்பு உருவாக்கப்பட்டது. இனவன்முறைகளிலும் படுகொலை சம்பவங்களிலும் நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள், இந்த மன்றத்தில் தோன்றி, தாம் செய்தவற்றை பகிரங்கமாக ஒப்பு கொண்டு, வெகுஜன மன்னிப்பை பெறுகின்ற முறைமையாக இது அமைந்தது. தென்னாபிரிக்க மக்களின் வரலாற்றில் மட்டுமன்றி, உலக வரலாற்றிலேயே ஒருபோதும் மேற்கொள்ளப்படாத வரலாற்று முன்னுதாரணம் மிக்க உயர்ந்த ஜனநாயக வழிமுறையாகவும் அந்த நாட்டில் வேறுபட்ட இனங்களிடையே ஐக்கியம் ஏற்படுவதற்கான உறுதியான அடித்தளமாகவும் இந்த உண்மைமன்றம் அமைந்திருந்தது.

பிறசமூகங்கள் மீதான கூட்டுவன்முறைகளையும் கூட்டுப்படுகொலைகளையும் பகிரங்கமாக ஏற்று கொள்வதும் மன்னிப்பு கோருவதும் உயாந்த ஜனநாயக விழுமியங்களில் ஒன்றாக அமைகின்ற அதேநேரத்தில், வெவ்வேறு சமூகங்கள், இனங்கள், தேசங்கள்..என்பவற்றுக்கிடையே நம்பிக்கையும் ஐக்கியமும் ஏற்படுவதற்கான சிறந்த வழிமுறையாகவும் இது அமைகின்றது. கடந்தகால வன்முறைகளினால் ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத இழப்புகள், ஆழ்நத துயரங்கள், ஆற்றமுடியாத வடுக்கள், தீராத வன்மம் ..என்பவற்றை சுமந்த நிலையில் வாழ்கின்ற மக்களை நேர்மையான வாஞ்சையுடன் தடவி கொடுக்கின்ற ஆத்மார்த்த ஒத்தடமாக அமைகின்றது. பாதிக்கப்பட்ட மக்களின் இதயங்களின் அடியாழத்திலிருந்து ஊற்றெடுக்கின்ற நம்பிக்கையும், அச்சமின்மை மற்றும் வன்மம் நீங்கிய சுதந்திர உணர்வும் அவர்களின் முகங்களின் விரிந்த புன்னகையாக மலர்ச்சியுறும்போதுதான், உண்மையான சமூக ஐக்கியம் என்பது அங்கு கருப் பதிக்கின்றது.

அதேநேரத்தில், இவ்வாறாக திறந்த மனதுடன் தமது பாரதூரமான தவறுகளை பாதிக்கப்பட்டவர்களின் முன்னிலையில் பகிரங்கமாக மன்னிப்புக்கோருவதனூடாக இக்குற்றங்களை மேற்கொண்ட அமைப்புகளும் (அச்சமூகமும்) நபர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் தங்களை உறுத்தும் ஆழமான குற்ற உணர்விலிருந்து விடுபட்டு ஒரு மிகுந்த மனஆறுதலைப் பெறும் சூழலை ஏற்படுத்துகின்றது. இது மேற்படி சம்பந்தப்பட்ட அமைப்புக்கள், நபர்கள் மற்றும் அச்சமூகத்தின் கூட்டு உளவியலையும் மற்றும் அச்சமூகத்தின் ஆன்மாவையும் ஆரோக்கியப்படுத்தி வலுப்படுத்துகிறது. இவ்வாறு தவறுகளை பகிரங்கத் தன்மையுடன் ஒப்புக்கொள்வதால் கிடைக்கும் பெறுபேறுகள் தவறிழைத்த தரப்புக்கு கிடைக்கும் நீண்டகால அனுகூலமாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக பகிரங்கத்தன்மை என்பது, இத்தகைய கோரநிகழ்வுகள் மீண்டும் நிகழ்த்தப்பட மாட்டாது என்று அறிவிக்கின்ற தார்மீக உத்தரவாதமாக பாதிக்கப்பட்ட மக்களின் முன் நிற்கின்றது. இத்தகைய பகிரங்கத்தன்மையானது, முரண்பட்ட சமூகங்களை தொடுக்கின்ற மிக வலிமையான இணைப்பு பாலமாக அமைகின்றது. இதற்கு மாறாக, இத்தகைய தார்மீக உத்தரவாதம் வழங்கப்படாதபோது, பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் அச்சமும் வன்மமும் தொடர்வது மட்டுமல்ல, முன்னைய வன்முறை நிகழ்வுகள் மீண்டும் நிகழ்த்தப்படும் என்பதை மறைமுகமாக உணர்த்துவதாகவும் அது அமைகின்றது.

இத்தகைய பகிரங்க தன்மை இன்னமும் நமது தேசஅரசியலில் இடம்பெறவில்லை என்பதை நாம் எவ்விதம் அர்த்தப்படுத்த போகின்றோம்? இது நமது ஜனநாயக விழுமியங்கள் மீது கேள்வியை எழுப்பவில்லையா? அல்லது நாம் இன்னமும் இத்தகைய ஜனநாயக முறையை பின்பற்ற கூடியளவுக்கு முதிர்ச்சியடையவில்லை என்று ஒத்துகொள்வதா? நமது அரசியல் அமைப்புக்களிடம் இன்னமும் படிந்துள்ள, புதைந்துள்ள இனவெறுப்பினை, ஆதிக்க மனோபாவத்தை இது வெளிப்படுத்துகின்றதா?

நமது அரசியல் அமைப்புக்கள், குறிப்பாக விடுதலை புலிகள் அமைப்பு, முஸ்லிம் மக்கள் மீதும் சிங்களமக்கள் மீதும் தாம் இழைத்துள்ள இனவன்முறையின் அவமானத்தை சுமந்த நிலையில் உள்ளன. முஸ்லிம் தேசத்தை பொறுத்தவரை, வடக்கிலிருந்து அவர்கள் முற்றாகவே வெளியேற்றப்பட்டும் கிழக்கில் பலநூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டும் இருப்பிடங்கள், பொருளாதாரம், சொத்துக்கள் எனபவை அழிக்கப்பட்டவர்களாகவும் உள்ளார்கள்.

வடக்கு முஸ்லிம்கள் தமது சொந்த வாழ்விடங்களுக்கு திரும்புவதற்கு எந்த கணத்திலும் தயாராக இருக்கின்றார்கள். அவர்களை மீள குடியேறும்படி சிறிலங்கா அரசு நிர்ப்பந்தித்தும் கூட, தாம் அகதிகளாக வாழ்கின்ற சூழலின் நிராகரிப்பு, அவமானம், வாழ்க்கை சுமை, சீர்குலைவுகள், இன அடக்குமுறை என்பவற்றின் தாக்கங்களை நாளாந்தம் அனுபவிக்கின்ற போதிலும் கூட, அவர்கள் இன்னமும் தமது வாழ்விடங்களுக்கு திரும்பாமல் இருப்பதற்கு ஒரே காரணம், விடுதலை புலிகள் அமைப்பிடமிருந்து அவர்கள் எதிர்பார்க்கின்ற அந்த நம்பிக்கையூட்டும் உத்தரவாதம் பகிரங்கமாக வழங்கப்படவில்லை என்பதுதான். அந்த வெளிப்படையான, தார்மீகம் தோய்ந்த, அரசியல் பெறுமதிமிக்க உத்தரவாதம் இன்னமும் விடுதலை புலிகளிடமிருந்து வெளிப்படாத நிலையில், தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவில்லை என்பதை அவர்கள் மிக தெளிவாகவும் மிகச்சரியாகவும் உணர்ந்திருக்கின்றார்கள்.

கிழக்கு முஸ்லிம்கள் மீதான விடுதலை புலிகளின் அச்சுறுத்தலும் அகற்றப்படவில்லை. 1990களின் நடுப்பகுதியில், காத்தான்குடியிலிருந்து முஸ்லிம்களை வெளியேறும்படி விடுதலை புலிகள் அமைப்பின் பெயரில் கடிதங்கள் அனுப்பப்பட்டபோது, அங்கு ஏற்பட்ட அச்சுறுத்தலையும் கொந்தளிப்பையும் போக்குவதற்கு விடுதலை புலிகள் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அத்தகைய கடிதங்களை தாம் அனுப்பாத போதிலும் கூட, தமது பெயரில் அனுப்பட்ட கடிதம் என்ற அடிப்படையிலும் தமது பெயரில் இன்னொரு சமூகம் அச்சுறுத்தப்பட்டுள்ளது என்றவகையிலும் அதை மறுத்திருக்க வேண்டிய தார்மீக பொறுப்பை விடுதலை புலிகள் கொண்டிருந்தார்கள். எனினும் அவர்கள் அதை மறுக்கவில்லை என்பது, அச்சுறுத்தும் கொடிய நிழலாக, அந்த முஸ்லிம் மக்களை கணிசமான காலத்திற்கு பின்தொடர்ந்தது.

கிழக்கு முஸ்லிம்கள் மீது விடுதலை புலிகள் மேற்கொண்ட படுகொலைகளும் வன்முறை தாக்குதல்களும் அவர்கள் மத்தியில் விடுதலை புலிகள் தொடர்பான நம்பிக்கையீனத்தையும் சந்தேகத்தையும் வன்மத்தையும் இன்னமும் தேக்கி வைத்துள்ளன. எந்த கணத்திலும் விடுதலை புலிகளினால் தாம் தாக்கப்படலாம் என்ற அச்சம் அவர்கள் மத்தியில் ஓயாது தளும்பி கொண்டிருக்கின்றது. அவ்வப்போது அவர்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற கொலைகள், கடத்தல், கப்பம், வரி.. என்பவை இத்தகைய அச்சச்சூழலை கொந்தளிக்க செய்கின்றன. இவற்றை தாம் செய்யவில்லை என்று விடுதலை புலிகள் மறுப்பதோ, அல்லது மௌனமாக இருப்பதோ அந்த முஸ்லிம்களின் அச்சத்தை தீர்க்கின்ற வழிமுறை அல்ல. அதற்கு மாறாக, இத்தகைய செயல்களில் தமக்கிருந்த பங்கை பகிரங்கமாக ஒப்புக்கொண்டு, அதற்கான பொது மன்னிப்பை கோருவதும், இனிமேல் இத்தகைய நிகழ்வுகளில் தமது அமைப்பு ஈடுபடமாட்டாது என அறிவிப்பதுமே முஸ்லிம்கள் மத்தியில் நமபிக்கை தளிர் மகிழ்ச்சியுடன் துளிர்விடுவதை ஊக்குவிக்கும். இதுதான் தமிழ், முஸ்லிம் தேசங்களுக்கிடையில், உறுதியானதும் நேர்மையானதுமான சமூக, அரசியல் உறவுகள் தோன்றுவதற்கும் அடித்தளமாக அமையும்.

விடுதலை புலிகள், தாம் கைது செய்த சிங்கள் படையினரை விடுதலை செய்யும் போது, சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுகின்ற தாக்கத்தை, நம்பிக்கை ஒளியை, மகிழ்ச்சிப் பரவலை எம்மால் உணர முடிகின்றதா? இவ்வாறு விடுதலை புலிகள் படையினரை விடுதலை செய்வதும் கூட, ஒருவகையில் பகிரங்கத்தன்மைதான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆம்! படையினரை விடுதலை செய்வதன் மூலம், முதலாவதாக, விடுதலை புலிகள் தாம் அவர்களை கைது செய்ததை பகிரங்கப்படுத்துகின்றார்கள். இரண்டாவது,

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்களும் வெகுஜனப் போராட்டங்களும்!



ஒரு மக்கள் சமூகத்தின் உயிர்த்துடிப்பு மிக்க சமூக இயக்கத்தையும், அம்மக்கள் சமூகம் தமது சமூக வாழ்வுடன் கொண்டிருக்கும் பிணைப்பையும் வெளிப்படுத்துவனவாக வெகுஜனப் போராட்டங்கள் உள்ளன. தம்மீதான அடக்குமுறைகளுக்கு எதிராக ஒன்றுதிரளல், ஆவேசமுடன் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தல், ஆபத்தை எதிர்கொள்ளத் தயங்காத போர்க்குணாம்சம் ஆகிய மானுட உள்ளாற்றல்களின்தொகுப்பாக வெகுஜனப்போராட்டங்களைக் காண முடியும். இவ்வாறான வெகுஜனப் போராட்டங்களினூடாக குறிப்பிட்ட மக்கள் தொகுதி தனது இலக்குகளை நோக்கி முன்னேறக் கூடியதாயுள்ளது. இவ்வாறாக, தமது சமூக இயக்கத்தில் தாம் எதிர்கொள்ளும் தடைகளைத் தகர்த்து முன்னேற மக்கள் திரள் மேற்கொள்ளும் எழுச்சி நடவடிக்கைகளில் பிரதானபங்கு வகிப்பவர்களாக பெண்கள் உள்ளனர். பெண்களின் பங்கேற்பு இல்லாத வெகுஜன எழுச்சிப் போராட்டங்களே இல்லை எனலாம்.

மனித சமூகம் என்பது அதன் அடிப்படை அர்த்தத்தில் பெண்களாலும் ஆண்களாலும் ஆனதே. இன்னும் விரிவான அர்த்தத்தில் பார்ப்போமாயின் பெண்களதும் அவர்களது பிள்ளைகளினதும் தொகுப்பே மனித சமூகம். தேசங்கள், வர்க்கங்கள், சாதிகள், மதங்கள். ... என பிரிந்துள்ள மனித சமூக கூறுகள் அனைத்துமே பெண்களினதும் ஆண்களினதும் (பெண்களதும் அவர்களது பிள்ளைகளினதும்) தொகுப்பாலானவையே. இப்படியாக மனித சமூக ஒன்றுதிரட்சியில் பெண்கள் பிரிக்க முடியாதவர்களாயிருக்கும் அதேநேரம், மனித இனத்தை மறுஉற்பத்தி செய்கிறவர்கள் எனும் வகையில் பெண்கள் பிரதான சக்தியாயுள்ளனர். மனித சமூகத்தை உற்பத்தி செய்திடும், மனித சமூகத்தின் சரிபாதிக்கும் அதிகமானவர்களாகவேயிருக்கும் பெண்களது பங்கேற்பு இருக்கையிலேயே, குறிப்பிட்ட சமூகங்களது எழுச்சிகள் உண்மையான மக்கள் எழுச்சிகளாக அர்த்தம் பெறுகின்றன.

நமது தேசிய எழுச்சியின் தொடக்க காலங்கள் கொந்தளிப்பான மக்கள் போராட்டங்களது காலகட்டங்களாயிருந்தன. இப்போராட்டங்களில் நமது பெண்கள் மிகவும் தீவிரமாகப் பங்கேற்றனர். ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள், பேரணிகள், பொதுக்கூட்டங்கள் யாவிலும் பெண்கள் திரண்டிருந்தார்கள். நேரடியாகப் பங்குபற்ற முடியாத பெண்களும், இவற்றின் வெற்றிக்கு தம்மாலான ஒத்தாசைகளை வழங்கினார்கள். 60களின் பிற்பகுதியில் நடைபெற்ற சாதிய எதிர்ப்பு போராட்டங்களிலும பெண்கள் முதன்மைப் பாத்திரம் வகித்தனர். இப்படியாக, நமது சமூகத்தில் எழுச்சி பெற்றுவந்த தேச மற்றும் சாதிய போராட்டங்கள் பெண்களின் பங்கேற்பினால் பலம் பெற்று முழுமைபெற்றன.

83களில் ஆயுதப் போராட்டம் தீவிரம் பெற்றதுடன், குறிப்பாக, இளம் பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் பங்கேற்கத் தொடங்கினர். இது தேசப் போராட்டத்தில் பெண்களின் இன்னொரு பரிமாணத்திலான பங்கேற்பின் தொடக்கமாக அமைந்தது. அதன் மறுபுறம் தாய்மாரும் குடும்பப்போஷகர்களுமான பெண்கள், தமது பிள்ளைகள், கணவர்கள், உடன்பிறப்புக்களுக்காயும் சமூகத்தின் சக மனிதர்களுக்காகவும் எதிரிக்கெதிராக கிளர்ந்தெழுந்தனர். யாழ் அன்னையர் முன்னணி மற்றும் மட்டக்களப்பில் காணாமற் போனோருக்கான தாய்மாரின் இயக்கம் போன்றன நமது தேசப் பெண்களின் போர்க்குணாம்சத்தின் வெளிப்பாடாயமைந்திருந்தன. பெண்களின் இந்தவகைப் போராட்டங்கள் நமது தேசப் போராட்டத்தின் நியாயத்தன்மையை சர்வதேச அளவில் எடுத்துரைப்பதில் பெரும்பங்கு வகித்துவந்துள்ளன.

கடந்த மார்ச் மாதம் பெண்கள் தினத்தையொட்டி யாழில் கச்சேரிக்கு முன் காணாமற் போனோருக்காக பெண்கள் நடாத்திய மறியல் போராட்டமானது பெண்களின் [illegible] வெற்றிகரமானதாகும். இத்தகைய போராட்டங்களே எதிரியை பெரிதும் அச்சத்திற்குள்ளாக்குகின்றன. இயந்திரத் துப்பாக்கிகளை ஏந்திநிற்கும் எதிரிக்கு முன்னால், தமது நியாயத்தின் குரலையே ஒரே ஆயுதமாக்கி அலை அலையென திரண்டு வரும் பெண்கள் கூட்டத்தினை எதிரியால் ஒன்றும் செய்ய முடியாது போகிறது. நிராயுதபாணியான இந்தப் பெண்களில் ஒருவரை சுடுவது கூட எதிரித்தரப்பிற்கு சர்வதேச அளவில் அவப்பெயர்களையும் அரசியல் சரிவுகளையும் ஏற்படுத்திடும்.

அரபுலகில் நடைபெற்றுவரும் பாலஸ்தீன மற்றும் அண்மையில் விடுதலைபெற்ற லெபனானிய பெண்களது எழுச்சிப் போராட்டங்கள் வரலாற்று முன்னுதாரணம் மிக்கவையாகும். ஆயுதந்தரித்த எதிரிக்கெதிராக கைமுஷ்டிகளை உயர்த்தியபடியும் கூச்சலிட்டபடியும் திரண்டுவரும் பெண்கள் கூட்டத்தின் முன் ஆயுதம் ஏந்திய ஆண் படையினர் பின்வாங்கிச் செல்ல நேர்கிறது. எதிரியின் மீது கற்களை எறிந்தும் தடுப்புகளை தள்ளிவிடுவதன் மூலமும் பெண்கள் வெளிப்படுத்தும் எதிர்ப்பு எதிரியை திக்குமுக்காடச் செய்கிறது. இவ்வாறு எதிரிக்கெதிரான பெண்களின் கோபாவேசமான ஒருங்கிணைவானது ஒருதிட்டவட்டமான அரசியல் போராட்ட வடிவமாகும். பி. எல். ஓ. வினது போராட்டங்களை விட பாலஸ்தீனப் பெண்களின் எழுச்சிப் போராட்டங்கள்தான் சியோனிச ஆக்கிரமிப்பாளர்களையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் நிலைகுலையச் செய்கின்றனவாயுள்ளன.

ஈழத்தமிழ் தேசம் என்பது பெண்களதும் அவர்களது பிள்ளைகளதும் தொகுப்பாகும். அவ்வகையில் இத்தேசத்தின் முதன்மை சக்திகளான பெண்கள் நாம்தான் நமது தேசத்தினை எதிரியிடமிருந்து பாதுகாப்பதில் பிரதான சக்திகளாகிறோம். ஆயுதப் போராட்டத்தில் நமது பெண்கள் உலகிலேயே நிகரற்ற பெண்கெரில்லாக்கள் என தம்மை நிரூபித்துவிட்டனர். எனினும் வெகுஜனப் போராட்டக்களத்தில் நாம் அதிகமாகவே முன்னேற வேண்டியுள்ளது. நமது எதிரியான சிறிலங்கா அரசானது தனது இன்றைய பலவீன நிலையில் வெகுஜனப் போராட்டங்களைக் கண்டு அஞ்சுகிறது. இந்நிலையில், பெண்கள் நாம் நமது எதிரியை அனைத்துத் தளங்களிலும் அம்பலப்படுத்திடும் விதமாக தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் சிறிலங்கா அரசையும் அதன் ஆதரவு சக்திகளையும் மேலும் பலவீனப்படுத்துவோம்.

தாயகப்பிரதேசங்களில் போன்றே, ஈழத்தமிழ்ப் பெண்கள் பரந்துவாழும் புலம்பெயர் நாடுகள் எங்கும் ஈழத்தமிழ்ப் பெண்களான நமது எழுச்சிப் போராட்டங்கள் நடைபெற வேண்டும். அதன் மூலம் நமது விடுதலைப்போராட்டத்தின் நியாயத் தன்மைகளை மென்மேலும் உலகுக்கு வெளிப்படுத்துவோம். தேசத்தின் விடுதலைக்காக முழங்கிடும் பெண்கள் நமது நீதிக் குரல் ஐக்கிய நாடுகள் சபைவரை எதிரொலிக்கட்டும். அது நமது தேசத்திற்கான ஐ.நா. அங்கீகாரத்திற்கு வழிவெட்டட்டும். வீரமிகு ஆயுதப்போராட்டத்தின் மூலம் புதிய வரலாறு படைத்திருக்கும் ஈழத்தமிழ்ப் பெண்களான நாம், தன்னெழுச்சிப் போராட்டங்கள் மூலமாகவும் நமது எதிரியை வெல்வோம்.

தேசத்தின் விடுதலைக்கான பெண்கள் நமது எழுச்சிப் போராட்டங்கள், தேச விடுதலைப் போராட்டத்துடன் முற்றுப்பெறுவன அல்ல. இக்காலத்தில் நாம் திரட்டிக்கொள்ளும் போராட்ட பலமும், சமூக ஆளுமையும் அனுபவங்களும் மறுபுறம், நமது தனித்துவமான பெண்விடுதலைப் போராட்டத்திற்கும், ஒட்டுமொத்தத்தில் சமூகத்தில் பெண்களின் நிலைமைக்கும் பலம் சேர்ப்பதாய் அமைகிறது. ஆயுதப் போராட்டத்தின் தீர்க்கத் தன்மையைப் போன்றே, வெகுஜன மட்டத்திலான கிளர்ச்சிப் போராட்டங்களும், அதில் ஈழத்தமிழ்ப் பெண்களான நமது பங்கேற்பும் நமது சமூகத்தின் ஆளுமையை மேலும் வளப்படுத்தும் என்பதில் நமது அக்கறைகள் குவியட்டும்.

-தோழி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஆனையிறவு...

(3ஆம்பக்கத்தொடர்)

புலிகளின் நடவடிக்கைகள் சர்வதேச அரங்கில் எதிரொலிக்கத் தொடங்கின. தேச விடுதலைப் போராட்டத்துடன் மக்களது உணர்வுகள் பிணைந்து இறுகும் இக்காலப் பகுதிதான் போராட்டத்தின் இன்றைய வெற்றிக்கு அடித்தளமிட்ட, தேசத்தின் அரசியல் திருப்பக் காலகட்டமாகும் என்பதை இவ்விடத்தில் குறித்துக்கொள்வோம். 97 மற்றும் 98இல் மத்திய தமிழீழத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிராந்தியங்களை முற்றிலும் தமது கட்டுப்பாட்டின் கீழ் விடுதலைப் புலிகள் கொண்டு வந்ததானது, தாயகத்தின் விடுவிக்கப்பட்டதும் போராட்டத்தின் பின்தளமாக இருக்கின்றதுமான பிரதேசங்களை உருவாக்கியிருக்கின்றது. இதுவும் ஆனையிறவு வெற்றிக்கான அடிப்படைத் தயாரிப்பாய் அமைந்தது. கடந்த வருடம் இறுதிப் பகுதியில் வன்னியில் புலிகளுக்குக் கிடைத்த வெற்றிகள் ஒரு குறிப்பிட்ட திசையில் போராட்டம் திட்டவட்டமாக நகருவதற்கான அறிகுறிகளை வெளிப்படுத்தத் தொடங்கியிருந்தன. அதன் பின்னரான குறுகிய காலத்துள் நமது போராட்ட வரலாற்றில் நமது தேசம் எதிர்பார்த்திருந்த பெருந்திருப்பம் நடந்தேறி விட்டது. ஆனையிறவு வெற்றியுடன் தமிழீழத்தில் சிறிலங்காப் படைகளின் முதுகெலும்பு முறிக்கப்பட்டு விட்டது. இனிமேல், தமிழீழ அரசை நோக்கி நமது விடுதலைப் போராட்டம் முன்னேறுவதை சிங்களப் படைகள் முறியடிப்ப தென்பதுஅவர்கள் வந்தடைந்திருக்கும் இன்றைய வீழ்ச்சிக் கட்ட நிலையிலிருந்து முடியாத காரியமாகும். அந்நிய உதவிக்காக அவர்கள் அலைந்து திரிவதே இதை நிரூபிப்பதாயுள்ளது.

வரலாற்று வளர்ச்சி என்பது சீரான வேகத்தைக் கொண்டதல்ல. அது மிகவும் அசமத்துவமான இயக்கப் போக்கைக் கொண்டதாயுள்ளது. சிலகாலகட்டங்களில், இயக்கமற்று தேங்கிக் கிடப்பது போல் நிலைமைகள் புலப்படும். மின்னல் தாக்கியது போல், கணப்பொழுதுக்குள்தான் மாற்றங்கள், பெருந்திருப்பங்கள், புரட்சிகள் ஏற்படுகின்றன. அதன்பின்னரான குறிப்பிட்ட காலகட்ட சமூக இயக்கம் குறிப்பிட்ட இலக்கில் மிக வேகமான பாய்ச்சல்களுக்கு உள்ளாகும். 20 வருடங்களாக ஒரே தாள லயத்துடன்(rythm) இயங்கிக் கொண்டிருந்த அரசியல் நிகழ்வுகள் சில மணித்தியாலங்களு க்குள் முற்றிலும் தலைகீழாக்கப் படுகின்றன. ஆனையிறவு வெற்றியுடன் கூடிய துரித மாற்றங்களே இதற்கான சிறந்த உதாரணமாயுள்ளன.

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய அரசியல் கட்சிகளும் சரி, அதன் பின்னர் தோன்றிய போராட்ட அமைப்புகளும் சரி தமிழ்த் தேசத்தின் அரசியல் கேந்திரப் பகுதியாக யாழ்ப்பாணத்தையே் கருதி வந்தனர். யாழ்மைய சித்தாந்தமே இதற்குக் காரணமாகும். விடுதலைப் புலிகளும் இந்தக் கருத்துப் போக்கைக் கொண்டவர்களாவர். இதன் காரணமாகவே விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில் அதிக ஆர்வமுடையவர்களாயுள்ளனர். நமது எதிரி சிறிலங்கா அரசும் கூட இந்த சித்தாந்தப் பாதிப்புக்குள்ளாகியிருப்பதால் தான் யாழைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க அதீத பிரயத்தனம் எடுத்துக்கொள்கிறது.

எனினும் தற்போதைய ஆனையிறவு வெற்றியுடன் கூடிய யாழ் வெற்றியை யாழ் மையவாதமாக அர்த்தப்படுத்துவது தேசப் போராட்டத்தின் வெற்றி நோக்கிய நகர்வை சித்தாந்தக் குறுக்கல்வாத கண்ணோட்டத்துடன் அணுகியதாக அமைகிறது. மையக் கண்ணியான ஆனையிறவு சிதறியதன் தொடர்ச்சியாக, அதைத் தொடர்ந்து சிறிலங்கா இராணுவத்துக்கு ஏற்பட்டிருக்கும் பலவீன நிலையின் எதிரொலியாக யாழ் வெற்றி அமைந்திருப்பதன் அரசியல் இராணுவ காரணிகளே இங்கு பிரதான அவதானத்திற் குரியனவாயுள்ளன.

பிற்போக்கான சித்தாந்தங்களுடன் தம்மை அடையாளப்படுத்தும் அமைப்பெனும் வகையில் யாழ் வெற்றிக்கு புலிகள் அதிக முக்கியத்துவம் கொடுக்கலாம். கடந்த 4 வருடங்களாக யாழ் தமது கட்டுப்பாட்டில் இல்லாதது அவர்களுக்கு உளவியல் சிக்கலுக்குரிய விடயமாகவே இருந்துள்ளது. புலிகளின் பேச்சாளர் திரு. அன்ரன் பாலசிங்கம் “கலாச்சார நகரம்” என யாழைக் குறிப்பிட்டிருப்பது அவர்களின் யாழ்மைய உளவியலின் வெளிப்பாடுதான். இவ்வாறு தாயகத்தின் பிரதேசங்களைக் கூறுபோட்டு, ஒரு பிரதேசத்திற்கு மாத்திரம் முன்னுரிமைக் கொடுப்பது தேசத்தின் ஒருமைப்பாட்டை சிதைப்பதாக அமையும். நமது தேசத்தின் அனைத்துப் பிரதேசங்களும், மக்களும், மக்களின் பண்பாட்டு வாழ்வியல் முறைகளும் சமத்துவமானவை எனும் வகையில் ஒரு பிரதேசத்திற்கு மாத்திரம் அழுத்தம் கொடுக்கும் அரசியல் - சிந்தனைப் போக்கு நிராகரிக்கப்பட வேண்டியதாகும். .

விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் அதிகரிக்க அதிகரிக்க போராட்டத்தின் பலம் அதிகரிக்கும். அதேபோல் போராட்டம் முனைப்பாக நடைபெறும் மையத்தை நோக்கியே அனைவரது கவனமும் குவிவதால் அப்பிரதேசமானது பிரதான பேசுபொருளாக மாறுகிறது. இவ்வடிப்படையிலேயே யாழ் வெற்றி நமது தேசத்தின் பிரதான பேசுபொருளாக இன்றைய கட்டத்தில் மாறியிருக்கிறது.

\- சுபத்திரா -

## விடுதலைப் புலிகள்...

(5ஆம்பக்கத்தொடர்)

போர்க் கைதிகளை விடுதலை செய்தல் என்ற, ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயக மரபை, அவர்கள் பகிரங்கமாக பின்பற்றுகின்றார்கள். இத்தகைய பகிரங்க தன்மையானது, சிங்கள மக்கள்மத்தியிலும் சர்வதேச அளவிலும் விடுதலை புலிகள் அமைப்புக்கு எவ்வளவு சாதகமாக அமைகின்றது என்பதை புரிந்து கொள்ளும்போது, முஸ்லிம்கள் மீதும் சிங்கள மக்கள் மீதும் தாம் மேற்கொண்ட வன்முறை நடவடிக்கைகளை பகிரங்கமாக ஒப்பு கொள்வது என்பது, விடுதலை புலிகள் மீதான களங்கமாகவோ, அவர்கள் செல்வாக்கின் மீது பலவீனத்தை ஏற்படுத்துவதாகவோ அமைய போவதில்லை. மாறாக, அவர்கள் மீதான முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் நம்பிக்கை அதிகரிக்கவும் தமிழ், முஸ்லிம் அரசியல் ஒற்றுமை வலுப்படவும் இவற்றின் ஒட்டுமொத்த விளைவாக நமது விடுதலை போராட்டம் மேலும் பலமடையவும் நமது விடுதலை மேலும் துரிதமடைவதும் சாத்தியமாகும்.

சிறிலங்கா அரசு நமது மக்கள் மீது, கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொள்வதாலும் கைதுசெய்யப்பட்டுள்ள நமது மக்களை மனிதாபிமானமற்ற முறையில் நடத்தி வருவதாலும் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் அந்த அரசுக்கு ஏற்பட்டுள்ள செல்வாக்கிழப்பையும், அபகீர்த்தியையும் நாம் அறிவோம். ஒவ்வொரு சிங்கள படையினரையும் விடுதலை செய்யும்போது, அது சிறிலங்கா அரசுக்கு ஏற்படுத்துகின்ற நெருக்கடிகளினதும் அரசியல் அவமானத்தினதும் ஆழத்தை நாம் புரிந்துள்ளோம். இவ்வாறு விடுதலை புலிகள் வெளிப்படுத்துகின்ற சிறிய பகிரங்கதன்மையும் கூட, அந்த அமைப்புக்கும் நமது போராட்டத்திற்கும் ஏற்படுத்தியிருக்கின்ற சாதகமான விளைவுகளை சரியாக கிரகிப்போமாயின், விடுதலை புலிகள் வெளிப்படுத்த கூடிய நேர்மையான, உறுதியான பகிரங்கதன்மையானது, அவர்களையும் நமது போராட்டதையும் மிக உயர்ந்த நிலையில் நிறுத்தும் என்பதை சந்தேகமின்றி உணர்ந்து கொள்வோம்.

\- வரதன்-

## தமிழ் ஊடக... (1ஆம்பக்கத்தொடர்)

இதற்கு தமிழீழ மக்கள் கட்சி தனது முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குகின்றது. தமிழ் ஊடகவியலாளர் மீதான அடக்குமுறைகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்த்து அம்பலப்படுத்தும் கடப்பாட்டை எமது கட்சி தொடர்ச்சியாக மேற்கொள்ளும்.

தற்போது அரசபயங்கரவாதமானது தமிழ் மக்களின் மீது வெளிப்படையாகவே கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. இதனை அம்பலப்படுத்துவதுடன் சர்வதேச மயப்படுத்தி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய மாபெரும் கடமை தமிழ் ஊடகவியலாளர் வசம் விடயப்பட்டுள்ளது. இந்த வரலாற்று கடமையை அவர்கள் ஆற்றுவர் என்ற மக்களின் நம்பிக்கை நிச்சயம் காப்பாற்றப்படும்.

உள்ளூர் அடக்குமுறைச்சட்டங்கள் கொண்டு ஊடகவியலாளர்களின் கரங்களை கட்டிப்போட அரசு கனவு காணலாம். சர்வதேச ஊடகத்துறைக்கும் ஊடகவிலளார்களுக்கும் இடையிலான உறவை அரசபயங்கரவாதிகளால் என்னதான் செய்துவிட முடியும்?

தாரிணி

## தமிழீழ... (2ஆம்பக்கத்தொடர்)

லையீடு செய்வதன் மூலமோ, அல்லது இவர்களின் அடிமை அல்லது அரை அடிமை அரசாகிய சிறிலங்காவை மீளவும் பலப்படுத்துவதன் மூலமோ, தத்தமது தேசிய நலன்கள் என்ற பெயரில் ஆதிக்க கரங்களை எம்மீது விரித்தால் அதற்கு எதிராக மிகவும் கடுமையாக தன் சக்தி அனைத்தையும் குவித்து நமது தேசம் போராடும். அப்படியாயின், இன்னுமொரு வியட்நாமை, புத்தாயிரமாம் ஆண்டின் தொடக்கம் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதும் திண்ணம்.

எமது தேசத்தின் இன்றைய மௌனத்தை குமுறிக்கொண்டிருக்கும் உள்ளார்ந்த எரிமலையாக புரிந்து கொண்டு இந்த ஆதிக்க சக்திகள் ஒதுங்கிக் கொள்ளட்டும். மனிதாபிமான உதவிகள் அதனதன் எல்லைக்குள் நின்று விடட்டும். எங்களது குருதியருவிகளும் மரணங்களும் இந்த ஆதிக்க அரசுகளுக்கு இராஜதந்திர விளையாட்டுக்களா என்ன?

தருமு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழம்

'The Editor'
BM Box 4002
London. WC IN 3XX
United Kingdom

www.thamileelam.org
info@thamileelam.org

## அந்நிய தலையீட்டை உறுதியுடன் முறியடிப்போம்!!!

நமது தாயகத்தின் விடுதலைக்கானப் போராட்டத்தில் ஏற்பட்டிருக்கும் பெருந்திருப்பமும் நமது போராட்டம் அதன் இறுதிக் கட்டத்திற்குள் காலடி வைத்திருப்பதனும் ஊடாக, நமது போராட்டம் சர்வதேச அளவிலான சக்திகளது கவனத்தை ஈர்த்துள்ளது. பிரதானமாக சர்வதேச ஆதிக்க சக்திகளின் முக்கிய கவனத்தைப் பெற்றுள்ளது. சிறிலங்கா அரசுக்கு சார்பான அனைத்து ஆதிக்க சக்திகளும், தேச விடுதலைப் போராட்டங்களுக்கு எதிரான சக்திகள் அனைத்தும், ஜீரணித்துக் கொள்ள முடியாத கடுமையான எதிர்ப்புடன், நமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கி அழித்திட சந்திரிக்கா அரசுக்கு அனைத்து உதவிகளையும் வழங்க முன்வந்துள்ளன.

தமிழீழ மக்களான நாம், நமது சொந்தப் பலத்தில் போராடி விடுதலை பெறுவதும், நமக்கான தேச அரசை ஸ்தாபிப்பதும் தென்னாசியப் பிராந்தியத்தின் பெரும் அரசியல் வெடிப்பாக அமைந்திடும் என்பதே இவர்களது பிரதான வாதம். உண்மையில், இது இந்த ஏகாதிபத்திய சக்திகளினதும், பிராந்திய ஆதிக்க சக்திகளினதும் நலனுக்கு நேரடி குந்தகமாக இருக்கப் போகிறது என்பதனாலேயே இச் சக்திகள் அனைத்தும் நமது போராட்டத்தை விழுங்கிட ஓரணி திரண்டுள்ளன. அத்துடன், "சிறிலங்காவின் நிலத் தொடர்ச்சி பாதுகாக்கப்பட வேண்டும்", "தமிழீழம் அமைவதை அனுமதிக்க முடியாது" எனும் தமது உறுதியான முடிவிலிருந்துதான் இந்த ஆதிக்க சக்திகள் அனைத்தும் நமது தேசியப் பிரச்சனைக்கு தீர்வுகாணப்பட வேண்டும் என பகிரங்கமாக அறிவித்து வருகின்றன.

"தமிழீழம் அமைவதை அனுமதிக்க முடியாது" என்பது வெறும் கூற்று அல்ல. விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தேசம் எனும் வகையில் இது நமக்கு விடப்பட்டிருக்கும் எச்சரிக்கையாகும். சிறிலங்கா அரசை தோற்கடிக்கவும் நமது மண்ணை மீட்கவும் நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு முன்னோக்கிய அடியினதும் மறுபுறம், இவ்வாதிக்க சக்திகள் நமது விடுதலைப் போராட்டத்தை துடைத்தெறிவதற்கு, தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் - ஆக்கிரமிப்புப் போர் தொடுப்பது உட்பட - செய்து திட்டமிட்டும் வருகிறது என்பதே உண்மை.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றியானது, அந்நிய ஆதிக்க சக்திகளுக்கெதிரான போராட்டத்துடனேயே முடிவுக்கு வருமென்பது தவிர்க்க முடியாததாகியிருப்பதையே இன்றைய நிலைமைகள் நமக்கு உணர்த்தி வருகின்றன.

தேசத்தின் விடுதலையை உயிர்மூச்சாகக் கருதும் தமிழீழ மக்களான நாம், அந்நிய ஆக்கிரமிப்பை வெற்றிகரமாக முறியடித்ததன் மூலம் நமது தலைமுறைகளும் பெருமிதங் கொள்ளத்தக்க வரலாற்றைக் கொண்டவர்களாவோம். எதிர்காலத்திலும், நாம் இதுவரையில் வந்தடைந்திருக்கும் வெற்றிகளையும் நமது விடுதலையையும் பாதுகாத்துக் கொள்ளும் மனத்திடம் நமக்குண்டு. எத்தகைய கொடிய எதிரியையும் துணிகரமாக எதிர்த்து முறியடித்திடுவதற்கான வலிமையையும், தளரா உறுதியையும் நாம் வளர்த்தெடுப்போம்.

இறுதிப் போரில் நமது தேசம் கால்பதித்திருக்கும் இக்கட்டத்தில், குறிப்பிடத்தக்க மக்கள் கிளர்ச்சிகள் தேசமெங்கும் விரிவடைந்து வருகின்றன. இதில் நமது மாணவர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டங்கள் நமது தேசத்தில் எழுச்சிபெற்றுவரும் மக்கள் போராட்டங்களின் தீவிரத்தன்மையை உயர்ந்த வடிவத்தில் வெளிப்படுத்துவதுடன், எதிரியின் அட்டுழியங்களை சர்வதேச அளவில் அம்பலப்படுத்தியும் வருகின்றன. எழுச்சி பெற்ற நமது மாணவர்களின் போராட்டத்தை பலப்படுத்தவும், அனைத்து மக்களதும் அரசியல் பங்கேற்பிக்கான ஜனநாயகமான அரசியல் சூழலை உருவாக்கிடவும், திரண்டு வரும் எதிரிகளை தோற்கடித்து தேச விடுதலையை உறுதிப்படுத்தவும் தேசப் போராட்டத்தில் நமது பங்கேற்பை தீவிரப்படுத்துவோம்.

## தமிழகத்தில் ஈழத்தமிழர்...

சிங்கள இனவெறி அரசின் அழித்தொழிப்பிலிருந்து தம்முயிரைப் பாதுகாத்துக்கொள்ள தமிழகம் நோக்கி ஈழத்தமிழர் செல்வது கடந்த 17 வருடங்களாக நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் தஞ்சமடையும் நமது மக்களுக்கு தமிழக மக்களும் தமிழக அரசும் தம்மாலான ஒத்தாசைகளையும் உதவிகளையும் வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்திய மைய அரசினதும் மற்றும் தமிழக அரசினதும் நெருக்குதல்களின் விளைவாக தமிழகத்தில் தஞ்சமடையும் ஈழத்தமிழர்கள் மீது பொலிசின் நெருக்குதல்கள் தற்பொழுது அதிகரித்து வருவது ஈழத்தமிழரின் நலனில் அக்கறையுடைய அனைவரும் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயமாகும். சிங்கள அரசின் கொடுமைகளிலிருந்து தப்பிக்க, தமது தமிழக உடன் பிறப்புகளிடம் தஞ்சமடையச் செல்லும் தமிழீழ பொதுமக்கள், தமிழகக் கரையில் பொலிசின் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே முகாம்களுக்கு அனுப்பப்படுகின்றனர். இவ்வாறு அகதிகளாக வரும் இளம் பெண்களும் ஆண்களும் விடுதலைப்புலிகள் எனும் சந்தேகத்தின் பேரில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். சிங்கள இராணுவத்தின் கொலைகார துப்பாக்கிகளின் பார்வைக்குத் தப்பி தமிழகக் கரையை அடைபவர்களை இந்திய காவற்படை இவ்வாறு மிக மோசமாக நடாத்துவது எவ்விதத்தில் நியாயமானதாகும்?

இறுதியாக எடுக்கப்பட்ட கணக்கெடுப்புகளின்படி தற்பொழுது தமிழக அகதிமுகாம்களில் 65,000 பேர் வரையில் உள்ளனர். இவர்களில் சிலர் பல்வேறு வழக்குகளின் அடிப்படையில் சிறப்பு முகாம் எனப்படும் சூரிய ஒளி புகாத இருட்டறை சிறைகளில் பல வருடங்களாக அடைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அடைக்கப்பட்டிருப்பவர்களில் பலர் மீதான வழக்குகள் முடிவடைந்து அவர்களை விடுவிக்கும்படி நீதிமன்றனம் தீர்ப்பளித்திருந்தும், இன்னும் இவர்கள் இவ்விருட்டறைகளில் விடப்பட்டுள்ளனர். இவ்வாறு தொடர்ந்து இருட்டறைகளில் இருப்பதன் காரணமாகவும் இவ்வறைகள் சுகாதாரக் கேடுமிக்கனவாய் இருப்பதனாலும் இவர்கள் அனைவரும் தோல் நோய்களுக்கும் இதர பல்வேறு நோய்களுக்கும் உள்ளாகுகின்றனர்.

இன்று தமிழகத்திற்கு வந்து கொண்டிருப்போர் உட்பட 18 வருடங்களாக தமிழகத்தில்வாழ்ந்துவரும் ஈழத்தமிழர்கள் அனைவருமே தமிழக மக்களும்தமிழ்த் தலைவர்களும் தம்மைப்பாதுகாப்பார்கள் எனும் நம்பிக்கையுடனேயே உள்ளனர்.

இந்த மக்களின் நலனில் தமிழக ஜனநாயக முற்போக்கு சக்திகளும் மற்றும் தமிழக அரசியல்த் தலைவர்களும் அக்கறை கொண்டு இதற்கான உரிய ஆதரவு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நமது அகதி மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஏனையவர்கள் போல் சுதந்திரமாக வாழ அடிப்படை நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழக மற்றும் மத்திய அரசுகளையும் இச்சக்திகள் அழுத்த வேண்டுமென அவர்கள் விரும்புகின்றார்கள்.

தழிழீழ விடுதலைப்போராட்டத்தை பலப்படுத்தும்விதமாகவும், ஈழத்தமிழர்களின் நம்பிக்கைகளை உறுதிப்படுத்தும் விதமாகவும் தற்போது தமிழகத்தில் நமக்கான ஆதரவு அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். தமிழகத்தில் செயற்பட்டுவரும் பல்வேறு மக்கள் அமைப்புகளும் பகிரங்கமாக தமிழீழத்தையும் ஈழப்போராட்டத்தையும் ஆதரிக்கத் தொடங்கியிருப்பது நமது தேசத்தை உற்சாகப்படுத்துகிறது. சகோதர மக்களின் இந்த ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாம் வரவேற்கிறோம். இன்றுவரையிலும் ஈழப்போராட்டத்திற்காக குரல்கொடுத்தும் ஆதரவுவழங்கியும் வரும் முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் மற்றும் தமிழ் அரசியல்தலைவர்களதும், அமைப்புகளதும், போராட்ட சக்திகளதும் பாத்திரத்தை ஈழத்தமிழர்கள் என்றென்றும் நினைவிற்கொள்வர்.

வட அமெரிக்கத் தொடர்புகட்கு: 300 Borough Dr., PO Box 47032, Scarborough,On., M1P 4ZP Canada
ஐரோப்பியத் தொடர்புகட்கு: 'The Editor', BM BOX 6769, LONDON, WCI 3XX, U.K. Tel: 07041372064



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்